9th November 1965]

பள்ளிகளில் பாடப் புத்தகங்கள்

* 387 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எல்லா மாநிலங்களிலும் உள்ள பள்ளிகளில் ஒரே மாதிரியான விஞ்ஞானப் பாடப் புத்தகங்களை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என மத்திய அரசு மாநில அரசாங்கங்களுக்கு ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

* 388 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-65-ம் ஆண்டிலும், 1965-66-ம் ஆண்டிலும் எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பிற்கான சமூக நூல் புத்தகம் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No representation regarding the non-availability of Social Studies Text-books for the S.S.L.C. Class in the years 1964–65 and 1965–66 has been approved by the Text-Book Committee.

* 389 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ம் ஆண்டில் S.S.L.C. க்குத் தேவையான எல்லா புத்தகங்களும் அரசினரால் வெளியிடப்பட்டனவா ?

(இ) இல்லையாயின் தனிப்பட்டவர்களுக்கு எந்தெந்த புத்தகங்களுக்கு அரசாங்கம் வெளியிட அனுமதி வழங்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Text books in languages (Tamil, Telugu, English, etc.) are prescribed by the University. Non-detailed books in languages are prescribed by the Education Department from the books received from the private publishers. Books in the subjects are prescribed by the managements themselves from the list of books approved by the Text-Boook Committee.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சமூக நூல் என்ற பாடத்திலே சரித்திரம், பூகோளம் எல்லாவற்றையும் மொத்தமாகப் போட்டிருப்பதால் மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். தனித் தனியாக சரித்திரம், பூகோளம் என்று பிரித்து புத்தகங்களைப் போட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது சரித்திரம், பூகோளம் பிரிக்கப்பட்டிருக்கிறது.